திரு. கா. வேழவேந்தன்: இந்தச் சீரிய திட்டம் தாமதப்பட என்ன காரணம்? விரைவுபடுத்தத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: புற்றுநோய் தடுப்புத் திட்டம் என்ற முறையில், புற்றுநோய்த் தடுப்பு நிலையத்திலே, அதுவும் கருப்பையின் வாய்ப்புறத்தில் தோன்றுகிற புற்றுநோய் பற்றி, நோய் தோன்றுவதற்கு முன்கூட்டியே ஏற்படுகிற அடையாளங்களைப் பரிசோதனை செய்து, மருந்துகள் கொடுத்து, அதனைத் தடுக்கின்ற பணி நடந்து கொண்டிருக்கிறது. இது வீடு வீடாகச் சென்று—இருபது வயதிற்கு மேற்பட்ட எல்லாப் பெண்களையும் கேள்வி கேட்பதன் மூலம் உடல் கூற்றினை அறிந்து கொண்டு, ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

வெறும் தடுப்புத் திட்டம் என்ற முறையில் பணியாற்றினால் போதாது, புற்றுநோய் கண்டவர்களுக்கு விரிவாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று, ஏறத்தாழ 200 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவ நிலையம் காஞ்சிபுரத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதில் சிறிது தாமதம் இருக்கிறது. அது நிறைவேற்றிய பின்னர், சிகிச்சை வழங்கும் பணி தொடங்கும்.

ஊத்துக்கோட்டை மருந்தகக் கட்டடம்.

* 212 வினா. **திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டை அரசினர் மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது நலத் துறை இயக்குநருடைய ஆய்வில் இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த மருந்தகம் கட்டுவதற்கு ஏற்கனவே 30 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இடம் கிடைக்கவில்லை என்பதற்காக தாமதப்படுகிறது. இப்போது வேளாண்மைத் துறையினர் இடத்தை தருவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இந்த ஆண்டாவது கட்டிடத்தை கட்ட அரசு முன்வருமா?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதற்கு நிதி கூட கொள்கையளவில் ஒதுக்கப்பட்டாலும், இன்னும் இடம் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை. நிலம் ஒப்படைக்கப்படுமானால் தொடர்ந்து அதற்கான கட்டிடப் பணிகள் நடைபெறும்.

கிருஷ்ணராயபுரம் சுகாதார நிலையக் கட்டடம்

*213 **வின. திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதி 1975 இல் திடீரென இடிந்து விழுந்து விட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) வாடகைக் கட்டிடத்தின் ஒரு பகுதி 22—2—75 காலை இடிந்து விழுந்ததாக திருச்சி மாவட்ட சுகாதார அலுவலர் தெரிவித்துள்ளார். இந்த இடிபாட்டினால் ஆரம்ப சுகாதார நிலைய மருந்துகள் வைத்திருந்த அறை சேதம் அடைந்தது என்றும் சில மரச் சாமான்கள் சேதம் அடைந்தன என்றும் கூறியுள்ளார். மேற்படி விபத்து இயற்கையானதே என்றும் வெடிவைப்போ அல்லது வேறு விதமான தீய நோக்கத்தோடோ செய்ததில்லை என்றும் காவல் துறையினர் 9—5—75 ஆம் தேதியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த வாடகைக் கட்டிடம் உறுதியான கட்டிடம் தான். இயற்கையின் கோளாறினால்தான் இடிந்து விழுந்தது என்று சொல்லப்படுவது பொருத்தமாக இல்லை. இப்படி இடிந்து விழுந்ததற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் இனிமேலாவது ஆராய முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நல்ல உறுதியான கட்டிடமாக இருந்த காரணத்தினால்தான், மொத்தமாக இடிந்து விழாமல் ஓரிடத்தில் மட்டும் இடிந்து விழுந்திருக்கிறது. இதுபற்றி போலீசாரும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது இயற்கைக் கோளாறினால் இடியவில்லை என்றால், வேறு என்ன காரணம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்தால் எழுதி அனுப்ப வேண்டும்.